# குன்றுடையான்

## கதையும் பாடலும்.

சலகை, ப. கண்ணைனுரி.

தென்றல் வெளியீடு: உக.

# குன்றுடையான்.

கதையும், பாடலும்.

ஆசிரியர்.
சலகை, ப. கண்ணனார்.

**

மாண்புமிகு அமைச்சர்
கலைஞர், மு. கருணாநிதி அவர்களின்
தலைமையுரையுடன்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம். * சேலம் மாவட்டம்.

இந்நாடகத்தின் எல்லாவுரிமைகளும் ஆசிரியருக்குரியவை.
இதனைப் பயன்படுத்த விரும்புவோர் முறைப்படி அனுமதி
பெறுதல் வேண்டும்.

விலை 40 காசு.

கலைஞர். மு. கருணாநிதி அவர்களின்
சொற்பொழிவு "மாலைமணி" உதவியது

# முன்னுரை.

தன்னை மறந்து கிடந்த தமிழர் சமுதாயத்திற்குத் தன் மானம உணர்த்தியவர் பெரியார் ஈ-வே-இராமசாமி அவர்கள்.

தன்மான நெறியில், அரசியல், மொழி, கலை, இலக்கிய பண்பாட்டுத் துறைகளில் பழைமையும் புதுமையும் கலந்த பகுத்தறிவு பூர்வமான புதுநெறி வகுத்தவர் இன்றைய தமிழக முதலமைச்சர், பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அண்ணாவின் கருத்தும், எழுத்தும், நடிப்பும், நாடகமும் தமிழகத்திலே விளைததுள்ள கலைப் புரட்சி; தமிழக வரலாற்றிலே தனிப்பேரிடம் பெறுவது. அவரது அடியொட்டி நடைபயிலும் மிகப் பெரிய கலைப் பரம்பரையொன்று உருவாகியுள்ளது. அதனால் தமிழ்மொழி, தமிழ்க் கலைகள், தமிழக வரலாறு, தமிழ் இலக்கியம், பண்பாடுகள் சிறப்பிக்கப்படுகின்றன.

கலையாக்கத் துறையிலேபேரறிஞர் அண்ணாவின் தலைமுறையைச் சார்ந்த கலைஞன் என்பதிலே எனக்குப் பெருமையுண்டு; இடமுண்டு. எனது அறிவும், ஆராய்ச்சியும், கருத்தும், கலையும் கொண்டு அந்தப் புதிய பரம்பரைக்கு வலிவும், பொலிவும் சேர்க்க விரும்புகிறவன் நான்.

இக் "குன்றுடையான்" நாடகம், அந்த வகையில் வெற்றி பெற்றதெனறால், அதுவே நான் மகிழத்தக்க பெரு வெற்றியாகும். நாடகக் கதையும் பாடல்களும், கருத்துரைகளும் இவ்வாறு தொகுத்தளிப்பது புதுமையோ; பழைமையோ யானறியேன். பயனுள்ளது என்பது என் கருத்து.

நண்பர் திரு. எஸ். என் கண்ணப்பா அவர்கள் சிறந்த தமிழ் நடிகர். அவரது நவசக்தி நாடகசபா குன்றுடையானை சிறபபான முறையில் அரங்கேற்றி மகத்தான வெற்றியினைப் பெற்றுள்ளது. அவருக்கு எனது நன்றி.

தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர், மு. கருணாநிதி அவர்கள் அரங்கேற்றினுக்குத் தலைமை தாங்கியது எனக்கு மிகப் பெருமையளித்தது. அவரை அண்ணாவின் கலைப்பரம்பரையின் தனித் தலைவராகக் கருதுபவன் நான். அவருக்கு எனது நன்றி.

வாழ்த்துரை வழங்கிய, -மதிப்புரையளித்த தக்கார் அனைவர்க்கும் என் தலைதாழ்ந்த வணக்கமும் நன்றியும் உரித்தாகுக.

சலகை
6—3—68

அன்புடன்,
ப. கண்ணன்.

# குன்றுடையான்.

## நாடக நடிகர்கள்:

| | | |
|---|---|---|
| "பாரதி" எஸ். எஸ். கதிரேசன் | — | குன்றுடையான் |
| "கம்பர்" என். என். கண்ணப்பா | — | பொன்னன் |
| டி. தங்கராசு | — | சங்கரன் |
| கூத்தர்-மாரியப்பன் | — | துறவியார் |
| டி. பி. சக்திவேல் | — | செல்லாத்தான் |
| எம். கே. கிருஷ்ணமூர்த்தி | — | வீரவாகு |
| எஸ். சீனிவாசன் | — | காளியப்பன் |
| கல்லாப்பெட்டி-சிங்காரம் | — | குள்ளன் |
| சௌந்திரராசன் | — | செம்பான் |
| ரவி சங்கர்-சோமு | — | பூசாரி |
| மயிலை-கண்ணன் | — | வையம்பெருமாள் |
| இராஜசேகரன் | — | கொங்குச்சோழன் |
| எம். சி. லிங்கம் | — | தமிழ்ப் புலவர் |

மற்றும் பலர்.

## நடிகைகள்:

| | | |
|---|---|---|
| எஸ். என். பார்வதி | — | தாமரைநாச்சி |
| கே. ஆர். விஜயகமலம் | — | அருக்காணி |
| பேபி மணிமாலா | — | சிறுமி அருக்காணி |
| லீலா | — | குப்பாயி |
| சௌனப்பா | — | சொக்கி |

# கலைஞரின் தலைமையுரை......

அன்புள்ள நாடக ஆசிரியர் அருமை அண்ணன் கண்ணன் அவர்களே! முத்தமிழ்க் கலா வித்வ ரத்ன டி. கே. சண்முகம் அவர்களே! கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இன்றையதினம் தமிழனின் வீரத்தைக் காட்டுகின்ற-வீரம் செறிந்த நாடகத்தை ''குன்றுடையான்'' எனும் பெயரில் அருமை அண்ணன் சலகை ப. கண்ணன் அவர்கள் அருமையாக எழுதி, நண்பர். என். என். கண்ணப்பா குழுவினர் தமிழ் நாடு சங்கீத நாடக சங்கத்தின் நல்லாதரவுடன், வெகு சிறப்பாக அரங்கமேற்றி நடித்ததைக்கண்டு களித்தோம்.

அருமை அண்ணன் கண்ணன் அவர்களது நாடகங்களுக்குத் தலைமை தாங்குவது என்பது எனக்கு வழக்கமாகி விட்ட ஒன்றாகும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு என்று கருதுகிறேன், முதலில் சேலம் மாவட்டம் இடைப்பாடியில் ''வீரவாலி'' நாடகம் கண்டு வாழ்த்துரை கூறினேன். அதன்பின் அவர் எழுதிய ''நந்திவர்மன்'' எனும் நாடகத்திற்கு, சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூரில் நான் தலைமை தாங்கியிருக்கிறேன். அதன்பிறகு ஐந்தாண்டுகளுக்குமுன்னர் திருச்சி தேவர் மன்றத்தில் அவரது ''தென்னவன் சின்னமலை'' நாடகத்திற்குத் தலைமை தாங்கினேன். இன்று இந்தக் குன்றுடையான் நாடக அரங்கேற்றத்திற்கும் நானே தலைமை தாங்கியுள்ளேன்.

இடையில் ''தமிழ்வாழத் தலைகொடுத்தான்'' எனும் தலைப்பில் குமணன் வரலாற்று நாடகத்தினை அவர் எழுதியதும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் அதில் நடித்து வந்தார் என்பதையும் உங்களில் பலர் நன்றாக அறிவீர்கள்.

கோவை மாவட்டத்தினை ஆராய்ந்து வீரப்புதையல் ஒன்றினை எடுத்து நாடகமாகப் படைத்திருக்கிறார், எனது அருமை அண்ணன்.

வீரவரலாற்று நாடகமென்றால் பொதுவாககட்டபொம்மன், சேரன் செங்குட்டுவன், மருதுபாண்டியர் போன்ற ஏற்கனவே நன்கு விளம்பரமாகியுள்ள தமிழ் வீரர்களைப் பற்றிய நாடகங்களைத்தான் இதுவரையில் நாம் அதிகம் அறிந்திருக்கிறோம். ஆனால், தமிழ்நாடு முழுவதும் அறிமுகமாகாத பொன்னன் சங்கரன் என்ற இரண்டு நல்ல தமிழ்ப்பெரு வீரர்களை, நாடகத்தின் மூலம் அறிமுகப்படுத்தும்முயற்சியில் என்னுடன் நீண்டகால உறவுகொண்டவரும், மிகுதியும் உரிமை படைத்திருப்பவருமான அருமை அண்ணன் கண்ணன் அவர்கள் சிறப்பான வெற்றி பெற்றுள்ளார்.

சலகை ப. கண்ணனார் என்று இன்று குறிப்பிடும்போது இவர் பலருக்குப் புதியவராகத் தோன்றலாம் ஆனால் இருபது அல்லது முப்பது, ஏன் நாற்பது ஆண்டுகட்கு முன்புகூட, நான் மேலும் அதிகமாக ஆண்டுகளைத் தள்ளிக் குறிப்பிட விரும்பவில்லை; அப்படிக் குறிப்பிட்டால் என் வயது பற்றி ஆராய வேண்டி வந்துவிடும்; அது கலைக்குற்றத்தின் பாற்படும். சொல்லப்போனால், ஜே. பி கிருஷ்ணன் என்னும் பெயரில், அக்காலத்தில் பச்சை அட்டைப் பத்திரிகை என்று கூறப்பட்ட ஒளித்து ஒளித்து வைத்துப் படிக்கப்பட்ட "குடியரசு" பத்திரிகையில் முதன் முதலில் கதைகள் எழுதிய முதல் பகுத்தறிவு வாதி இவர் தாம் என்பது சாலப் பொருத்தமாகும்.

அந்த நாட்களில், "குடியரசு" ஏட்டில் பலரும் அறிவியக்கக் கட்டுரைகளையும், பாடல்களையும் எழுதியுள்ளனர். ஆனால் அறிவியக்கக் கருத்துக்களை சிறு கதைகள் மூலமாகச் சொன்ன பெருமை-முதன் முதலில் எழுதிய பெருமை-அன்று ஜே. பி. கிருஷ்ணன் என்றழைக்கப்பட்ட, இன்றைய சலகை.ப. கண்ணனார் அவர்களுக்கே உரியதாகும்.

அப்படிப்பட்ட எனது அருமை அண்ணன் அவர்கள் கோவை, சேலம், திருச்சி மாவட்டங்களில் புதைந்து கிடக்கின்ற வரலாறுகளை ஆராய்ந்தார். வாங்கல், வீரமலைச்சாரல் (மணப் பாறைக்கு அடுத்தது) போன்ற இடங்களுக்குச் சென்றார். பல்வேறு புத்தகங்களினுள் நுழைந்தார். கிடைத்த நல்ல கருத் துக்களை வீரக்காட்சிகளாகத் தொகுத்து, உண்மையை மறைக் காமல், தாம் சார்ந்துள்ள கட்சியின் கொள்கைக்கும் ஊறு தேடாமல், அதே சமயம், கதை நடந்த காலத்தின் மரபுக்கும் மாசு கற்பிக்கும் குற்றம் ஒரு துளியுமில்லாமல், அழகான-வெகு சிறப்பான வீரநாடகமாகப் படைத்துள்ளார்.

நண்பர் என். என். கண்ணப்பா அவர்கள் அவரது நவு சக்திநாடகசபாவின்வாயிலாகவெகுசிறப்பாகக்குன்றுடையானை அரங்கமேற்றியுள்ளார்.

இதுவரையில் சாதுவான பாத்திரத்தில் நடித்து "கம்பர் கண்ணப்பா" என்ற பெயர் பெற்ற நண்பர் கண்ணப்பா இந்த நாடகத்தின் மூலம் பொன்னன் என்ற வீரமிக்க பாத்திரத்திலும் சிறப்பாக நடித்து,வீர கண்ணப்பாவாகவிளங்குகிறார்.சாதுவான கம்பரே கூட, தம் மகன் அம்பிகாபதி கொலையுண்டான் என்ற தும் கொதித்தெழுந்து எழுத்தாணி கொண்டேமன்னனை மாய்க் கும் வீரங்கொண்டார் என்பதும் நாமறிந்ததே.

நல்லதொரு தமிழக வீரச்சுவையை நாடகமாக்கித் தந்த அருமை அண்ணனுக்கும், அதனை அழகுற அரங்கமேற்றிநடித்த நண்பர் கண்ணப்பாவுக்கும், அதனை அரங்கமேற்ற உதவி மானியம் அளித்த தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தினருக்கும் எனது நன்றியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

தமிழ்நாடு சங்கீத நாடகசங்கத்தினர் அளித்த நாடகத் தயாரிப்பு உதவி மான்யத் தொகையை, இந்த ஆண்டுமுதல் 7,500 ரூபாயாக (முன்பு ரூ 4,500) உயர்த்தியுள்ளது குறித்து எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்மூலம் நாடகசபாவிற்கும் நடிகருக்கும் அதிகம் தருவதைப் போலவே நாடக எழுத்தாளர்களுக்கும் அதிகம் தர வேண்டுகிறேன். நானும் ஒரு எழுத்தாளனாக இருந்தவன், இனியும் இருக்கப்போகிறவன், இடையிலும் இருப்பவன் என்ற முறையிலும் எழுத்தாளர்களுக்காகவும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கூடுதலாக அடுத்த ஆண்டிலிருந்து அளிக்க வேண்டுகிறேன்.

நான் தொடககாலத்தில் 1942-ஆம் ஆண்டு என்று கருதுகிறேன் "பழநியப்பன்" என்ற சமூக நாடகத்தை எழுதி நானே நடித்தேன். முதல் நாடகத்தில் 500 ரூபாய் மிச்சமிருந்தது. ஆசையின் காரணத்தால் மறுபடியும் ஒருமுறை நாடகத்தை நடத்தியதில், அடாது மழை பெய்ததின் காரணமாக 200 ரூபாய் கடன் பட்டேன். கடனைக்கட்ட வழியில்லை. வீட்டிலேயும் தருவதற்கு வழியில்லை. இறுதியில் நாகப்பட்டினத்தில் ஒரு நண்பரிடம் சென்று கேட்டேன். அவர் "நாடகத்தை எனக்கு உரிமை எழுதிக் கொடுத்து விடு, பணம் தருகிறேன்" என்றார். வேறு வழியின்றி ரூபாய் 200-க்கு நாடகத்தின் சகல உரிமைகளையும் எழுதிக் கொடுத்துக் கடனைத் தீர்த்தேன். இது அந்தக்கால எழுத்தாளனது நிலை!

இன்று திரைப்படத் தொழிலில் உள்ள எழுத்தாளர்கள் ஓரளவு நல்ல அளவில் உயர்ந்திருக்கிறார்கள், வருமானத்தில்! ஆனால் நாடகத்துறையில் உள்ளவர்கள் அந்த அளவிற்கு நல்ல நிலையில் இல்லை ஆகவே. அடுத்த ஆண்டுமுதல், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தினர், தனது மான்யத் தொகையிலேயே நடிகர்களுக்கு இவ்வளவு; எழுத்தாளர்களுக்கு இவ்வளவு என்று தனித்தனியாகக்குறிப்பிட்டுஒதுக்கிக்கொடுக்கவேண்டுகிறேன். அவ்வாறு செய்தால் நல்ல கதைகளும் நாடகங்களும்தோன்ற உற்சாகமளிப்பதாகும். இதற்காகத் தனிப்பட்ட முறையில் இல்லாவிட்டாலும், தமிழக அரசு வாயிலாக உதவிகள்தேவைப் படுமானால், என்னாலான ஒத்துழைப்பையும், உதவியையும் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நாடகங்களைக் காணும்போது எனக்குப் பொருமையாகக்கூட இருக்கிறது. இத்துறையை விட்டு வேறு எங்கெங்கோ போய்விட்டோமே என்று எண்ணுகிறேன். நான் இம்மேடைக்கு வந்து, இந்தச் சிம்மாசனத்தில அமரும்போது ஒரு ராஜாவைப் போன்று பெருமித உணர்ச்சியோடு உட்கார்ந்திருந்தேன். ஆனால், இம்மேடையில் நான் தலைவராக அமர்ந்திருந்த நாற்காலியில் ராஜாவாக நடித்த நடிகர்களைப் போன்று அமர முடியவில்லை. சாவ ஜாக்கிரதையோடு, மந்திரியைப் போன்று மத்தியிலே உட்கார்ந்தேன். கொஞ்சம் சாய்ந்தாலும் கவிழ்ந்துவிடும் போல் ஆடிக்கொண்டிருந்தது. ஆமாம், ஆடிக்கொண்டிருக்கும் அப்படிப்பட்ட இடத்தில்தான் அமர்ந்திருக்கிறேன் — ஆனால் சர்வ ஜாக்கிரதையும் பொறுப்புணர்ச்சியும் மிகுந்தவனாகஎன்பதையும் கூறிக் கொள்கிறேன்.

எனவே தமிழ் வளர, தமிழ்க் கலையினை வளர்க்க—கலைஞர்களை வளர்த்து அவர் தம் வாழ்வை வளப்படுத்த-எழுத்தாளர்களது வாழ்வு செழிக்க, இன்றைய தமிழக அரசு எல்லா நல்ல முயற்சிகளையும் மேற்கொள்ளும், தன்னாலான உதவிகளையெல்லாம் செய்யும் என்று மீண்டும் உறுதி கூறுகின்றேன்.

# "குன்றுடையான்" தோன்றினர்.

"கலையின் மூலம் பிறரது உணர்ச்சிகளைப் பெறுகின்ற சக்தி மனிதனுக்கு இருப்பதாலே, அவனது காலத்தில் வாழ்பவரின் உணர்ச்சிகள் யாவும் அவனுக்குக் கிடைக்கின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதர்கள் பெற்ற உணர்ச்சிகளும் அவனுக்குக் கிடைக்கின்றன. தமது சொந்த உணர்ச்சிகளைப் பிறருக்குப் பரவச்செய்யும் வாய்ப்பும் இருக்கிறது" என்றார் ருஷிய மேதை லியோ டால்ஸ்டாய்.

நம் காலத்தில் வாழுகின்ற மக்களின் உணர்ச்சிகளுக்கும், நிகழ்ச்சிகளுக்கும், கலைவடிவம் கொடுத்து மேடையேற்றும் பொழுது அது சமூக நாடகமாகிறது.

சென்றகாலத்தில் வாழ்ந்த மக்களின் உணர்ச்சிகளுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் கலைவடிவம் கொடுத்து மேடையேற்றும் போது அது வரலாற்று நாடகமாகிறது.

முன்னதைக்காட்டிலும் பின்னதைச் செய்து முடிப்பதில் ஆசிரியனது ஊன்றிய கருத்தும் உழைப்பும் அதிகம் தேவை. இதனில் ஓரளவு பயிற்சி எனக்குண்டு. சிறந்த வரலாற்று நாடகம் வரைகின்ற தகுதி எனக்கு இருக்கின்றதோ; இல்லையோ, விருப்பமும் வாய்ப்பும் இருக்கின்றன.

தமிழ்நாட்டில், குறிப்பாகக் கொங்குநாட்டுச் சிற்றூர். பேரூர்களில் பல வகுப்பினர் குன்றுடையானையும், அண்ணன் மார்களையும் குலதெய்வங்களாய்க் கொண்டு வழிபடுகின்றனர். மிகப் பலவூர்களில் கூடங்களும், சின்னங்களும் உள்ளன, "தெவம்" என்ற பெயரால் விழாக்கொண்டாடுகின்றனர். சாதி வேறுபாடும், பகைமையும் கடந்த இந்த வீரவழிபாடு, தமிழ் நாட்டில் தனிப் பண்புக்குரிய வியப்புறு காட்சியாகும்.

எனது பிள்ளைப் பருவத்திலேவிழாவினைக்கண்டதன் மூலம்

எழுந்த கேள்விக்கு, என் அன்னை சொன்ன விளக்கமாகக் கேட்டிருக்கிறேன். அண்ணன்மார் கதையினை, பின்னர் நான் படித்த நூல்களிலே, பல படிவங்களிலே கண்டேன். குறிப்புகள் எடுத்து வைத்தேன். உதவிய நூல்களிலே குள்ளம்பட்டியில் திரு. ப. இராமலிங்கம் அவர்கள் மூலமாகக் கிடைத்தஏட்டுச்சுவடியும், மற்றும் "கொங்குமண்டல சதகம்" "கொங்குநாட்டு வரலாறு" "கள்ளழகர் அம்மானை" "கொங்குச் செல்வி" "கொங்குநாடு" இதழ்த்தொகுப்பு ஆகியவையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இவைகளன்றி பம்பைக்காரர்கள் பாடுகின்ற அண்ணன்மார் கதையும், பாட்டுக்காரர்கள் ஆடுகின்ற குன்றுடையான் கூத்தும், தெவத்துக்குச் செல்லுகையில் சிலம்பொலித்துப் பாடுகின்ற வீரப்பாடல்களும் உண்டு. இவற்றில் பெரும்பாலும் கடுகை மலையாக்கும் கற்பனைச் சுவடுகளே காணப்படுகின்றன.

கோவை கிழார், முதுபெரும் தமிழர் திரு. சி. எம் இராமச்சந்திரனார் பி. ஏ. பி. எல். அவர்கள் கொடுத்த ஆராய்ச்சி பூர்வமான கருத்தும், திருப்பூர். திரு. பழனிசாமிப் புலவர் அவர்களின் "கொங்குச் செல்வி" தந்த விளக்கமும் குன்றுடையான் கதைக்கு அடிப்படையாக அமைந்தன. எழுதி முடித்தேன். எனினும் என் மனம் நிறைவு பெறவில்லை.

பம்பைக்காரர் பாட்டு முழுதும் ஒருமுறை கேட்க விரும்பினேன். எனது நண்பர் நல்லிபாளையம் திரு. க. பத்மராசு அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

பம்பைக்காரர் வாழும் நாமக்கல் பழையபாளையத்தில், கூட்டுறவு நாணய சங்கத் தலைவர் நண்பர் திரு. வி. இரங்கராசு அவர்கள் இல்லத்தில் தங்கி, பம்பைக்காரர்களை மூன்று பகல் இரவுகள் பாடவைத்துக் குறிப்புகள் எடுத்தேன். அவை பெரும்பாலும் புராண மரபில் கள்ளழகர் அம்மானையை ஒத்திருந்தன.

எனினும் அவர்கள் பாடிய பாங்கு கேட்போர் உள்ளத்தில் வீரம் விளைப்பதாயிருந்தது.

பம்பைக்காரர்களிடம் பல விபரங்களைக் கேட்டறிந்தேன். அவர்கள் கூறிய பெயர்கள், ஊர்கள், நிகழ்ச்சிகள், இடங்கள், வீரமலைப் படுகளம், அண்ணன்மார் சிலைகள், நடைபெறும் திருவிழா போன்றவை நாடகக் கதைக்குப் புதிய வடிவம் கொடுக்கப் பயன் பட்டன.

நான் கண்டதும், கேட்டதும், படித்ததுமான எல்லாக் குறிப்புகளினின்றும், பகுத்தறிவுக்கும், பண்புகளும் பொருந்தியன எடுத்தும். பொருந்தாதன விடுத்தும், முதலில் வானொலிக்கேற்ற நாடகமாக வரைந்து முடித்தேன். புத்துருவம் பெற்ருர் குன்றுடையான்.

திருச்சி வானொலி நிலையத்தின் நாடக விழாவில் "குன்றுடையான்" 20-2-66 ஒலிபரப்ப ஏற்பாடாயிற்று. ஒலிப்பதிவு செய்யும் முன்னர், வரலாற்றுக்குரிய இடங்களையும் நேரில் சென்று பார்த்திட விரும்பினேன். திருச்சிராப்பள்ளி சென்றேன். நிலைய நிருவாகியரிடம் எனது விருப்பம் கூறி, என்னோடு வருமாறு அவர்களையும் அழைத்தேன். விருப்போடு அவர்களும் ஒப்பினார்கள்.

நிலைய இயக்குநர் திரு. எம். எஸ். கோபால். பி. ஏ. அவர்கள், நாடக அமைப்பாளர், திரு. ஈ. கோவிந்தராசு எம். ஏ. அவர்கள், திரு. டி. வீ. கிருஷ்ணமூர்த்தி பட்டுக்கோட்டை திரு. குமாரவேலு அவர்கள், நான் ஆக ஐவரும் ஒரு மகிழுந்தில் வீரமலைக்குப் புறப்பட்டோம்.

எழுத்தாளர்கள், வரலாற்றுச் சின்னங்களை சென்று பார்த்து விளக்கம் பெற்ற பிறகு, அது பற்றிய கதை புனைவதே முறை. வாய்ப்புக் குறைவு காரணமாக நான் பாராமலேயே புனைந்து விட்டேன். நாம் எதிர்பார்க்கும் சின்னங்கள் ஆதாரங்கள் இல்லையென்ருல் நமது கற்பனை என்ன ஆவது? நண்பர்கள் என்ன கருதுவார்கள்? இவ்வாறு விளைந்திட்ட அச்ச உணர்வோடு வீரமலைச் சாரலில் நண்பர்களோடு நடந்து சென்

றேன். ஆம்! கிடைத்த சான்றுகள் என்னையும், என் கற்பனையையும் காப்பாற்றியதோடு, களிப்படையவும் வைத்தன.

அண்ணன்மார் பகைவரோடு போரிட்டு மடிந்த படுகளம்; அதனுள் காளியப்பன் மறைந்து நின்ற வன்னிமரத்தின் வேர்ப்பகுதி, பொன்னன், சங்கரனின் சிலைகள், சிறுகோயில், மற்றும் அருக்காணி, கொங்குச் சோழன், கன்னிப் பெரிய காண்டியின் பதுமைகள் கண்டேன். நாங்கள் போனநேரத்தில் திருவிழாவுக்காகக் கோயிலைப் பழுது பார்த்தும் புதுப்பித்துக்கொண்டும் இருந்தார்கள். சிலைகளைப் புகைப்படம் எடுத்தோம் நான் அங்கிருந்தோரிடம் மேலும் சில செய்திகளை கேட்டறிந்தேன்.

பல்லாயிரம் வீரர்கள் மடிந்து, சடலங்கள் குவிந்து, இரத்தம் உறைந்து, நாளடைவில் அவைகள் இரத்தக் கோளாங்கட்டிகளாக மாறி விட்டன என்று, கும்பல் கும்பலாகப் புதையுண்டு மேடிட்டுக் கிடந்தவற்றைக் காட்டினர். அவற்றின் புனிதம் கூறினர், தோண்டியெடுத்தோம்; பார்த்து வியந்தோம்.

அண்மையிலிருந்த குன்றுடையான் குன்றின்மேல், அவர் இறுதிக் காலத்தில் தவமிருந்த இடமும் பூசித்த சிவன் கோயிலும் இருப்பதாகக்கூறினார்கள் கன்னிப்பெரியகாண்டி வீரமலையில் தவமிருந்த இடத்தையும் சொன்னார்கள்.

வீரமலைச்சாரலும், படுகளமும், பைந்தமிழர் வீரமும் எங்கள் இதயத்தில் ஏற்றிய புத்துணர்ச்சியோடு குன்றுடையான் தலைநகர் வாங்கலைப் பார்க்கப் புறப்பட்டோம்.

காவேரிக்கரையில், கரும்பும், நெல்லும், வாழையும், தென்னையுமாக வயல் சூழ்ந்த பகுதியில் தனியிடத்தில் குன்றுடையானும் தாமரை நாச்சியும் கட்டிய பத்தினிக் கோயிலைக் கண்டோம்; அண்மையில் கண்டோம். மண்மேடாகிக்கிடந்த குன்றுடையான் கோட்டையை! பத்தினிக் கண்ணகியின் கோயிலை இப்பொழுது "பழைய வாங்கலாயி" கோயில் என்கிறார்கள்.

கருவறையில் இருப்பது கண்ணகியின் சிலையே ஆகும். வெளியே காளியின் சின்னங்கள் பிற்காலத்தில் எழுந்துள்ளன.

வெளிப் பிராகாரத்தில் குன்றுடையான், தாமரை நாச்சி, வீரவாகு ஆகியோரின் கற்சிலைகள் இருக்கின்றன. கோயிலையும், அவற்றையும் புகைப்படம் எடுத்தோம். வீரவாகுவின் சிலையை ஆதித் திராவிடர்கள் மட்டும் உள்ளேவந்து வணங்குவார்களாம். மேலும் சில செய்திகளைக் கேட்டறிந்தோம்.

கதையின் வளர்ச்சிக்கு நான் எடுத்துக்கொண்ட வரலாற்று ஆதாரங்கள் பொய்த்துப் போகாமல், கண்ணுக்கு மெய்யாய் நெஞ்சினிக்கக் காட்சியளித்தன. இதனால் நாடகம் வரைந்த எனக்கும், அதனை ஒலிபரப்பும் பொறுப்பேற்ற நிலைய நண்பர்களுக்கும் மிகுந்த மனநிறைவு ஏற்பட்டது.

நாங்கள் எடுத்த புகைப்படங்களில் சில "வானொலி" இதழிலும் இடம் பெற்றன.

குறிப்பிட்டபடி 20-2-66இல் நாடகம் ஒலிப்பரப்பாயிற்று. குன்றுடையான் பாத்திரத்தை நானே ஏற்று நடித்தேன், நாடகத்திற்கு நல்ல பாராட்டுக்கள் கிடைத்தன. நிலையத்திற்கு ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்ததாகக் கூறினார்கள்.

எனக்குள் மீண்டும் ஒரு புத்தெழுச்சி! விட்டுப்போன சில நிகழ்ச்சிகளையும் இணைத்து, ஒரு மணி நேரம் கேட்கும் ஒலி நாடகத்தை, மூன்றுமணிநேரம் பார்க்கும் மேடை நாடகமாக எழுதி முடித்தேன். குன்றுடையான் மேலும்புதுமையும்வலிவும் வனப்பும் பெற்றார்.

நாடகக் கலையாக்கத் துறையில் எனது நலன் கருதும் நண்பர்கள், தலைவர்களின் ஆதரவோடு "திருவள்ளுவர் கலையரங்கம்" அமைக்கப் பெற்றது. அதன் சார்பில் குன்றுடையானை நாமக்கல்லில் அரங்கேற்ற முயன்றோம். சிலபல காரணங்களால்

அது நடைபெறவில்லை. அந்தப்பணியைச் சிறப்போடு செய்து முடிக்கும் பொறுப்பை நண்பர் திரு. என். என். கண்ணப்பா அவர்களின் 'நவசக்தி நாடக சபா' ஏற்றுக் கொண்டது. நடிக மன்னர் கண்ணப்பா அவர்களின் ஆற்றலில் எனக்கு முழு நம்பிக்கையுண்டு. எனவே நாடகம் வெற்றிபெற வழியுண்டு.

தமிழக வரலாற்று நாடகங்கள் பலவற்றை நான் எழுதி அரங்கேற்றியுள்ளேன்.

எனினும். குன்றுடையான் தந்த அனுபவம் புதுமையானது. இதற்கு நான் தேடிய ஆதாரங்களும், படித்த நூல்களும், படைத்த பாத்திரங்களும், அமைத்த கதையோட்டமும், கதையோடு படரவிட்ட ஆன்மீகக் கருத்துக்களும் என் வரையில் புதியவை.எனினும் தமிழ் மரபின் எல்லைக்கோடு தாண்டாதவை.

கடின உழைப்பிலே உருவாக்கப்பெற்ற இந்த நாடகம், கி. பி. 13-ஆம் நூற்றுண்டுத் தமிழர்கள் பெற்றிருந்த வாழ்வின் உணர்ச்சிகளை. இருபதாம் நூற்றுண்டு மக்களுக்கு உணர்த்துவதிலே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குமென்று நம்புகிறேன்.

நல்ல கலைப் படைப்பு என்றால், அது நாட்டு மக்களின் மனநிலையை உயர்த்திட, சிந்தனையைத் தூண்டிவிடப் பயன்பட வேண்டும். சிறந்த வாழ்வுநெறியை வளப்படுத்த வேண்டும்.


இத்தகு இலட்சியக் கண்ணோட்டத்தில் ஆன்மீக வாழ்வு, வீரச்சிறப்பு, ஒழுக்க மேன்மை, அறம் காக்கும் திறன், சமரசப் போக்கு, சாதி ஒழிப்பு, பெண்ணின் பெருமை, உழைப்பின் உயர்வு, வேளாண்மைப் பயன் ஆகியவற்றைச் சிறப்பிக்கும் வைராக்கிய வீரவாழ்வுக் காப்பியமாகக் "குன்றுடையான்" விளங்குதல் வேண்டுமென்பது என் விருப்பம்.

நாடகத்திற்கு அத்தகுதி இருக்கிறது எனினும் பார்க்கின்ற மக்கள்பெறுகின்ற உணர்ச்சியே இதனை உறுதிப்படுத்த வேண்

டும். வேகமடைந்துள்ள சமுதாய வாழ்வுச் சுழலில், நுனிப்புல் மேய்ந்திடும் ஒழுக்க அறிவும், மனதின் அடித்தளத்தில் படியாத நெறியுணர்வும் பயனற்றுப் போகின்றன.

வீரவாழ்வில் தெய்வநிலை பெற்றுவிட்ட பொன்னன், சங்கரன்; அருக்காணி, குன்றுடையான், தாமரை நாச்சி ஆகியோரின் நெறிப்பட்ட நிமிர்ந்த நோக்கு, இன்றைய கன்னியர்க்கும் காளையர்க்கும்புதிதாகவும்புதுமையாகவும் தோன்றுவன.எனினும் சிந்தனையைத் தூண்டுவனவாகும்.

வீரத்தை மையமாகக்கொண்ட மேலை நாட்டு வரலாற்று நாடகங்கள் சில, நமக்கு வியப்பும் வீரவுணர்வும் கொடுக்கின்றன "இதுபோன்ற படைப்புகள் தமிழ் நாட்டில் இல்லையே" என்று குறைபடுவோரும், வருந்துவோரும் உண்டு. அத்தகையோர்க்கு குன்றுடையான் நாடகம் சிறிது மனநிறைவு தருமாயின் நான் பெரிதும் மகிழ்வேன்.



கலைஞர் தலைமையுரையாற்றுகிறார்.



நாடக நண்பரோடு கலைஞரும், ஆசிரியரும்.

கதைச்சுருக்கம்.

# குன்றுடையான்.

கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் கொங்கு நாட்டைச் சார்ந்த வாங்கல் நகரில் மணியமாகவாழ்ந்தவர்குன்றுடையான். அவரது ஆற்றல் மனைவி தாமரைநாச்சி.

இவர்களின் பொருளும் புகழும் கண்டு பொருமையால் புழுங்கினன், பங்காளித்தம்பி செல்லாத்தான். அவர்கள் கட்டிய கண்ணகி கோயில் குடமுழுக்கைச் சாக்காக வைத்து, கொங்குச் சோழரிடம் கோள்மூட்டினன்; மணியம் பதவியும் மாளிகையும் கைப்பற்றினன்.

பதவியும் பெருமையும் இழந்து குமைந்தார் குன்றுடையான். மனவுறுதியளித்தாள் மனைவாட்டி. இழந்துவிட்ட இரட்டைக் குழந்தைகள் போக, இருக்கின்ற பெண் குழந்தை சிறுமி அருக்காணியோடு தென்பாண்டி நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர். உழைப்பால் உயர்வுபெற ஐயர் பண்ணையொன்றில் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டனர்.

மணியம் பதவி பெற்ற செல்லாத்தான் குடித்து வெறித்துக் கும்மாளமிட்டான். அண்ணன் குன்றுடையானிடம் பகைத்து நின்ற தலையூர்ச் சிற்றரசன் காளியப்பனோடு தொடர்பு கொண்டான். தீவினை பெருகி வழிந்தது.

பதினறு ஆண்டுகளுக்கு முன்னர் செல்லாத்தானின் சூழ்ச்சியால் மடிந்ததாகக் கருதப்பட்ட தாமரைநாச்சியின் இரட்டைக் குழந்தைகளும், ஒருதுறவியாரால் எடுத்து வளர்க்கப்பெற்றனர். கல்வியும், கலையும் யோகநெறியும் கற்பிக்கப்பெற்றனர். பொன்னன், சங்கரன் என்ற பெயரோடு கட்டிளங் காளையராக-ஞான வீரனும் மானவீரனுமாக விளங்கினர். தக்க பருவம் வந்ததும் அவர்களின் பெற்றோர் யாரென்பதை விளக்கினர் துறவியார்.

வேளாண்மைத் தொழிலில் மனைவியின் ஒத்துழைப்போடு உழைத்துப் பொருள் குவித்தார் குன்றுடையான். அருக்காணிக்குக்கல்வியும் கலையும் கற்பித்தார். மெலிந்து சென்றவர்கள் உழைப்பிலே மேன்மையடைந்தனர். தாயகம் திரும்பினர். வாங்கலுக்கருகே சிறுகாற்புலியூரில் சிறப்போடு வாழ்ந்தனர்.

குன்றுடையான் பெற்ற மேன்மையறிந்து குமுறினன் செல்லாத்தான். அதிகார வெறிகொண்டு அநியாய வரி போட்டான். கொள்ளையிட்டான். தோட்டி வீரவாகு மூலம் தொல்லை பல கொடுத்தான், ஆபத்தான வேளையில் வந்தனர் பொன்னனும் சங்கரனும், கொடுமையினின்றும் பெற்றோரைக் காத்தனர் மான மைந்தர்கள்! அடிபட்டு வீழ்ந்த மாவீரன் வீரவாகு அவர்களின் அடிமையானன்.

நடந்தன யாவுமறிந்து கொங்குச்சோழமன்னரிடம் சென்றனர். அடங்காக் குதிரையை அடக்கினர். மன்னவன் செய்த தவறினை எடுத்துக்காட்டி இடித்துரைத்தனர். வாங்கல் மணியம் பதவி மட்டுமல்லாமல்,சிற்றரசராகவே குன்றுடையானைநியமித்தான் தவறையுணர்ந்த கொங்குச்சோழன்.

தந்தையை மன்னராக்கி முடிசூட்டினர் பொன்னனும் சங்கரனும், செல்லாத்தான் எல்லாவற்றையும் இழந்தான். மக்களின் திறனறிந்து பெற்றோர் பூரித்தனர். அண்ணன்மாரின் யோக சக்தியறிந்து அகமகிழ்ந்தாள் தங்கை அருக்காணி.

கொங்கனுகிய தலையூர் மன்னன் காளியப்பன், தனக்கு ஆட்சியுரிமை தர மறுக்கும் மாமன்னன் கொங்குச்சோழர், குன்றுடையானை மன்னனுக்கிய ஓரவஞ்சனையறிந்து மனம் கொதித்தான். எல்லாம் இழந்த செல்லாத்தான் வந்து சேர்ந்தான் எரியும் நெருப்புக்கு எண்ணெய் போல. குன்றுடையான் மைந்தர்களை பங்கப்படுத்தத் திட்டம் தீட்டினர்.

"வீரத்தைச் சோதிப்போம். போட்டி விளையாட்டுக்கு வருகிறீர்களா?" இவ்வாறு குன்றுடையான் சபைக்கு வந்தது காளி

யப்பனின் அறைகூவல்! மைந்தர்களை அனுப்ப ஒப்பினார் குன்றுடையான். இது பங்காளி செல்லாத்தாள் பகையின் விளைவு என்பதை நன்கறிந்தனர்.

அண்ணன்மாரைப் பின்பற்றி யோகநெறி பயின்றாள்; அவர்கள் வெற்றிக்காகக் கன்னியறம் பூண்டாள் தங்கை அருக்காணி. பொன்னனும் சங்கரனும் காளியப்பனின் வீரர்களோடு போட்டி விளையாடி எல்லாவற்றிலும் வென்றனர். களிப்படைந்தாள் அருக்காணி.

தலையூரான் காட்டிலிருந்த வேங்கையைக்கொன்று, தங்கை விரும்பிய பஞ்சவர்ணக்கிளியைக் கவர்ந்து வந்தான் சங்கரன். கொதிப்படைந்த காளியப்பன் கிளியையும், அருக்காணியையும் கொண்டுவருமாறு வீரர்களை ஏவினான்.

மைந்தர்க்கு மணம் முடிக்க விரும்பினர் பெற்றோர். "நாங்கள் பகைவரை வெல்லவேண்டும். அதுவரை பிரம்மச்சரியம் காக்கவேண்டும். பெண்ணைவிபட்டால் பெரும்பலம் குறைந்திடும்" என்றனர் பொன்னனும் சங்கரனும். "மாமன் மகளிரை மணந்துகொள்ளுங்கள். பகைமை வென்றபிறகு வாழ்வு நடத்துங்கள்" என்றாள் தாமரைநாச்சி.

பொன்னன்-பூவாயி, சங்கரன்-இராமாயி திருமணம் நடைபெற்றது. ஒதுக்கி வைக்கப்பெற்றனர் மனைவியர்.

நள்ளிரவு. கன்னிமாடத்திலிருந்த கிளியோடுகூண்டையும், அருக்காணியோடு மஞ்சத்தையும் தூக்கிச்சென்றனர் காளியப்பனின் வீரர்கள். சென்று குறுக்கிட்டுத் தடுத்தாள் தாமரை நாச்சி. கொலையுண்டு மடிந்தாள்.

செய்தியறிந்து ஓடிவந்தனர் குன்றுடையானும் மைந்தரும். துடித்தனர்; துவண்டனர். தன்னுயிரை மடிக்கத் துணிந்தார் குன்றுடையான். தக்க சமயத்தில் வந்த துறவியார் அவருக்கு

வாழ்வியல்நெறி கூறி, மனச்சாந்திபெறக் கானகம் அழைத்துச் சென்றார்.

தங்கையையும், கிளியையும் மீட்டுவரத் தலையூர் சென்றான் சங்கரன். அங்கே மஞ்சத்தில் அருக்காணிக்குப்பதிலாக அவளது கன்னித்தோழி குப்பாயி துயில்வதுகண்டு ஏமாந்தான்காளியப்பன். அவளை காளிக்கு பலியிடவேண்டும் என்றான். கூடாது என்றான் செல்லாத்தான்.கருத்துவேற்றுமை முளைத்தது.துரோகி செல்லாத்தான் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி விரட்டப்பட்டான்.

குப்பாயியை மீட்டுவந்தான் சங்கரன். கன்னியறம்குலைந்த தென்று வழியிலே மடிந்தாள் குப்பாயி. அவளைப் போற்றினாள் அருக்காணி. ஆட்சிப்பொறுப்பை ஏற்றனர் அண்ணன்மார்கள்.

மைத்துனன் வையம்பெருமாளோடு பந்தயம் வைத்து விளையாடித் தோற்றான் சங்கரன். நிபந்தனைப்படி சங்கிலியால் பிணைக்கப்பட்டு, இரும்புக் கொப்பறையால் தலைமூடப்பட்டான்.

பொன்னனைப்பழிவாங்க செம்பனுசாரியை ஏவினான் காளியப்பன். பொன்முலாம் பூசிய மரவள்ளம் கொடுத்துப் பொல்லாங்கு பேசினான்.சூழ்ச்சியால் மடக்கி சத்தியம்பெற ஏரிக்கரை பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச்சென்றான். அருக்காணி துடித்தாள், சின்னண்ணனுக்கு மடல் விடுத்தாள். கட்டுக்களை அறுத்துக்கொண்டு கிளம்பினான் அண்ணனைக் காக்க சங்கரன்.

அவன் வருமுன்பே கொல்லவந்த வஞ்சகன் செம்பனைக் கொன்று தீர்த்தான் பொன்னன்.

"இனிப் பொறுக்கமுடியாது.திரட்டுங்கள் நமது படையை" என்று கட்டளையிட்டான் காளியப்பன்.பத்தினிக்கோயில் மானிய நிலத்துப் பயிர்களில் பன்றிகளை விட்டு நாசமாக்கினான். இதிலே சூழ்ச்சி இருக்கிறது என்றாள் அருக்காணி. பன்றிவேட்டைக்குப் பெரும்படை திரட்டிச் சென்றான் சங்கரன்.

காளியப்பன் படைக்கும் சங்கரன் படைக்கும் பெரும்போர் மூண்டது. பன்றிவேட்டை மனித வேட்டை ஆயிற்று. போரின் இறுதிக்கட்டம் வீரமலைச்சாரலில் முடிந்தது. பல்லாயிரவர் மடிந்தனர். தப்பி ஓடினான் காளியப்பன் மட்டும்.

எல்லோரையும் இழந்துவிட்ட சங்கரன் தாகத்திற்குத் தண்ணீர் கொண்டுவர வீரவாகுவை அனுப்பிவிட்டுப் படுகளத் திலேகளைப்போடு உட்கார்ந்தான். காளியப்பன் வந்து வன்னிமரத் திலே மறைந்து நின்று சங்கரன் முதுகில் அம்பெய்தி வீழ்த் தினான்.

படுகளச் செய்தி கேட்டுப் பதறிவந்த பொன்னன், காளி யப்பனின் கயமைச் செயல் கண்டான். வாளால் வெட்டி வீழ்த்தினான்.

"முதுகுப் புண் பட்டுக் கோழைபோல் மடிகிறேனே அண்ணா! கோழையோ நான்?" என்று கதறினான் சங்கரன். "வீரனடா தம்பி, நீ வீரன்" என்று பாராட்டினான் பொன்னன். வீரமண்டியிட்டு அரிதுயிலில் ஆழ்ந்தான் சங்கரன். நெஞ்சிலே வாளேற்றிக்கொண்டு தம்பியைத் தொடர்ந்தான் அண்ணன்.

நீரோடு வந்த வீரவாகு நிலைமை கண்டு பதறினான். ஓடிச் சென்று அருக்காணியிடம் கூறிக்கொண்டே மடிந்தான்.

துடித்தாள் அருக்காணி. படுகளத்திற்குச் செல்ல வழியறி யாது தவித்தாள். கன்னியாகிய பெரியகாண்டி வந்து அழைத் துச் சென்றாள். அங்கே மடியாது மடிந்து நின்ற அண்ணன் மாரைக்கண்டு ஆற்றாமையோடு அழுது புலம்பினாள். திருந் திய செல்லாத்தாள் வந்து வருந்தியழுது மன்னிப்பு வேண்டினான்.

துறவியான குன்றுடையான் வந்தார். வீரவாழ்வுக்கு விளக்கம் தந்தார். பொன்னனும், சங்கரனும் வழிபட வேண் டிய வீர தெய்வங்கள் என்று வாழ்த்திச் சென்றார். அருக்காணி வழிபட்டாள். செல்லாத்தாள் வழிபட்டாள். தமிழகமே இன்றும் வழிபடுகிறது தெய்வநிலை எய்திவிட்ட மாவீரர்களை!

## காட்சி 1.

(கொங்குச் சீமையின் சிற்றூர் ஒன்றில் இரவு வேளையில், பொதுமக்கள் கூட்டத்தில், பம்பைக்காரர்கள் பம்பையடித்துப் பாடத் தொடங்குகின்றனர்)

1. சீரோங்கும் தமிழகமே!
செழித்தநல்ல தாயகமே!
பாரோங்கும் பெருமையுள்ள
பைந்தமிழே! எம்தாயே!

2 காரோங்கும் மலைநாடு
கருதும் கொங்குவளநாடு
பேரோங்கும் வீரர்கதை
பாடவருள தருவாயே.

3. காவேரி வயல்பாயும்
கரும்புநெல்லு வாழைதரும்
நாவேறிப் புகழ்பரப்பும்
நல்ல பொன்னிவளநாடு

4 நாடாளும் மணியமையா
பேரான குன்றுடையான்
வாடாத மனைக்கரசி.
தாமரைநாச்சியல்லோ!

5. கற்புத்தெய்வம் கண்ணகிக்கு
கட்டினரே கோயிலொன்று
காரியம் குடமுழுக்கு
கருதியல்லோ ஊர்ச்சபையில்

6. வற்புறுத்திக் கேட்டாரே
வல்லவராம் குன்றுடையான்
வாய்மைகெட்ட செல்லாத்தான்
வக்கரித்தான் அப்போது—

## காட்சி 3.

(தாமரைநாச்சியும், சிறுமி அருக்காணி
யும். மகளுக்குத் தாய் தனது மன
நிலை கூறல்)

பழைய பாட்டு.

1. மலடி மலடி என்று
மாநிலத்தோர் தூற்றினரே
வறடி வறடி என்று
வையகமே பழித்ததுவே.

2. பட்டி நிறைந்திருக்கும்
பால்மாடும் வெள்ளாடும்
பாதுகாப்பு நாயதுவும்
பச்சை மலடாச்சுதடி.

3. வீட்டில் வளர்ந்தபூனை
முகட்டெலியும பன்றியுமே
வேதனைதான் அத்தனையும்
கொட்டு மலடாச்சுதடி!

4. அருங்குறை தீரவென்று
ஆனதர்மம் செய்தோமடி

ஆருமதை ஏற்கவில்லை
மலடியென்ற காரணத்தால்.

5. ஆட்டுக்கல் போட்டோமடி
ஆரும்வந்து ஆட்டவில்லை
அடித்த சுமைதாங்கியிலே
சுமத்துவாரே இல்லையடி.

6. ஆடுமாடு நீர்த்தொட்டியும்
அருகம்புல்லும் படைத்தோம்
மலடிஉடையதென்று
மாடுதின்ன வரவில்லை

7. முத்துப்போல் கண்ணீரை
முகத்தோடு சோரவிட்டேன்
பித்துப் பிடித்தவர்போல்
பிதற்றினருன் அப்பனுமே!

அருக்காணி:- ஐயோ அம்மா! எவ்வளவு துன்பப்பட்டிருக்கீங்க நீங்க!

தாமரை:- இன்னும் கேளடி அருக்காணி, நான் பட்டதுயரை.

8. பெற்றபிள்ளையில்லாமையால்
தத்துபிள்ளை வேணுமென்று
பேரான பங்காளிகள்
ஊரைநாடிப் போனாரே.

9. அரணுக்கொடி மஞ்சளும்
அழகுமணிச் சிற்றுடையும்

அரும்புதண்டை சிறுசலங்கை
சீதனமாய் வச்சோமடி.

10. கொண்டுசென்ற தேன்கதலி
சீனிபலா மாங்கனியும்
கொடுத்துநான் குழந்தையினை
கொஞ்சியே மடியில்வைத்தேன்.

11. எடுக்கவில்லை சீர்களையும்
கொடுக்கவில்லை பிள்ளையினை
என் மடியில் இருந்தவனை
அடித்திழுத்துப்போனாரடி.

## காட்சி 5.

(கண்ணகிகோயில் குடமுழுக்கில் புலவர் பாடுகிறார்)

1. கொங்குச் செல்வியே தாழிணைபோற்றி!
குடமலையாட்டியே போற்றி! போற்றி!
கற்புக்கரசியே தாழிணை போற்றி!
கண்ணகி நங்காய் போற்றி! போற்றி!

2. பூவும் புகையும் மேவியவிரையும்
யாவும் படைத்தே வழிபட நின்றோம்.
தேவந் திகையின் தேனருந் தோழி
திருவருள் புரிவாய் வருவாய் வாழி!

3. அருஞ்சிறை நீங்கிய ஆரியமன்னர்,
அருள்நெறி கண்டவர் பெருநிலவேந்தர்

அனைவருமே தொழும் வினையறு நங்காய்
அன்பினுக்கரசி தென்னகத் தேவி.

(நிலையிழந்த தாமரைநாச்சியின்
மனக்குமுறல்)

ஆணையிட்டே சூளுரைத்தாள்
அமைதிகெட்டே தனைமறந்தாள்
சாணையிட்ட வாளதுபோல்
தாமரையாள் கரைந்தனளே!
வானைவிட்ட முழுமதிபோல்
வளமனைத்தும் விட்டவராய்
வழிநடந்தார் கண்ணகிபால்
தம்மையவர் ஒப்படைத்தே!!

## காட்சி 9.

(செல்லாத்தாள் குடியும் கேளிக்கையும்)

பாட்டு வேணுமா? ஆட்டம் வேணுமா?
பசிதீரப் போதை வேணுமா?
நீட்ட வேணுமா, நெளிய வேணுமா?
நிலையான இன்பம் வேணுமா?
இன்னும் வேணுமா?
இதுவே போதுமா?
காக்க வேணுமா, கருத்து வேணுமா?
கைகோர்த் தாடவே வேணுமா?
தாக்க வேணுமா, தனிமை வேணுமா?
தரமான சுவை வேணுமா?

## காட்சி 10.

(எழுஞாயிறு தோன்றும் வேளையில்.
உழுது பயிரிடும் குன்றுடையானும்
தாமரைநாச்சியும்)

குன்று:- காரிருள் நீங்கிடவே சூரியன் தோன்றுகிறான்
கருத்துடன் ஏருழுது விதைத்திடும் காலமிது—
விதைத்திடும் காலமிது
யாரிதைச் செய்வதிலும் பேருண்டு புகழுண்டு
நாமிருவரு மிணைந்தே நல்வினையைச் செய்குவமே—
நல்வினையைச் செய்குவமே

தாமரை:- மாரிபெய்து மண் ஊர்ந்து ஏரியது நிறைவது போல்
மாடுகட்டிப் பால்கறந்து வீடுகட்டி வாழ்குவமே—
வீடுகட்டி வாழ்குவமே
காரியத்தில் கண்வைத்தே காடுவெட்டிக் கழனி
செய்து
காராளர் குடிதழைக்க ஏராளம் விளைத்திடுவோம்—
ஏராளம் விளைத்திடுவோம்

(சந்தம் வேறு)

குன்று:- பார்முழுதும் ஏர்முனையில் வாழுதடி வண்ணமயில்
தாமரையே ஏனடியே தாமதம்?—வந்து
கூறடியே வேளாண்மை செய்விதம்.

தாமரை:- பொன்விளையும் பூமியிது பொங்கிடுதே ஊற்றதுவும்
பூட்டிடுக ஏரதனை இக்கணம்-நன்கு
ஓட்டிடுக விதையை விதைக்கணும்.

(சந்தம் வேறு)

குன்று:- சுழன்றும் ஏர்ப்பின்னது உலகென்ற உண்மையை

சொன்னவர் வள்ளுவர் மறவாதே-நங்காய்!
அன்னது ஆயிரம் பொன் மாதே.

தாமரை:- இழந்த நம் செல்வமெலாம் துறந்து வாழ்ந்தாலும்
எடுப்பதும் கொடுப்பதும் உழவாமே-மச்சான்
துடிப்புடன் தொழிலினைப் புரிவோமே.

## காட்சி 12.

(சிறுமி அருக்காணி ஆசானிடம் கலை பயிலல்)

1. கல்வியன்னை கலைமகளைப் போற்றுவோம்- வீர
காவியங்கள் படைத்துலகை மாற்றுவோம்
வெல்வதற்கு வேலெடுத்து வீசுவோம்—தமிழ்
வீரர்புகழ் அனுதினமும் பேசுவோம்.

2. திருக்குறளின் தேனெடுத்துப் பருகுவோம்—மனத்
தெளிவுடனே கலையுலகம் வருகுவோம்
விருப்பமதில் ஒழுக்கமதைக் கைவிடோம்—கெடு
வீணருக்கு வல்லடிமை செய்திடோம்.

(குமரி அருக்காணியின் நாட்டியம்)

எடுப்பு.

முத்தமிழ்க் கலைதன்னில் முழுமதி போன்றவள்
சித்தினி ஆடுகிறாள்—நடனம்
சித்தினி ஆடுகிறாள்-இங்கே (முத்)

தொடுப்பு.

பத்தரை மாற்றுப்பொன் பருவத்து மேனியாள்
பைங்கிளி போன்றவள் ஐஞ்சுவை தானிவள். (முத்)

படுப்பு.

இன்பத்துப் பால் கண்ட இலக்கணவடிவோ?
இலக்கியச் சுவை ஈன்ற எழிலுருவோ?

முடிப்பு.

தென்னகப் பண்போடு திருவிடம் வளர்ந்தவள்
தீரமும் வீரமும் தருவதில் சிறந்தவள். (முந்)

## காட்சி 15.

(மலைக்குகையில் பொன்னன் சங்கரனும், துறவியாரும்)

எடுப்பு.

சிவோஹம்—சச்சிதானந்தம்
சிந்தையுள் அன்பே பரமானந்தம். (சிவோ)

தொடுப்பு

தவயோகம் அரிதாம் தனிமையே இனிதாம்
தனிமோகம் இறைமேல் கொள்வதே திறமாம். (சிவோ)

## காட்சி 19.

(குன்றுடையான் அரசேற்கையில் புலவர் வாழ்த்து கூறல்)

1. அன்புநெறி தானோங்கும்
அறிவோடு திருவோங்கும்
ஆநாடு கோநாடு அழகு
பொன்னி வளநாடு

2. கோழைமன மில்லாத
குடிமக்கள் தன்னுழைப்பால்
வாழைதுள்ளி வயல்பாயும்
வளஞ்சூழ்ந்த தனிநாடு.
3. சிறுகாற் புலியூராம்
சீர்கொங்கு வளநாடு
சிறப்புதனை மிகப்பெற்று
மதிப்புயர வாழ்த்திடுவோம்.
4. காராளர் குலத்தோனும்
வீரபொன்னன் சங்கரனும்
பேராளர் பெற்ற புகழ்
பெருகிமிக வாழியவே!
5. எங்குமினி ஏர்வாழும்
ஏழையரின் குடிவாழும்
பொங்கிடுமே இன்பமெலாம்
புவிவாழ்க! தமிழ்வாழ்க!

## காட்சி 22.

(கன்னிமாடத்தில் அருக்காணியும், குப்பாயும் ஆடிப்பாடிக் களித்தல்)

எடுப்பு

பைங்கிளியே! நல்ல பைங்கிளியே!
பாடிப் பறந்திடு பைங்கிளியே! (பைங்)

தொடுப்பு.

1. பேரின்பம் காண்பது திறமடியே—ஞான
பெருவழி செல்வது அறமடியே

போரிடும் ஐம்புலப் பாவியரை—வென்று
பொல்லாங்கு நீக்கிடு பைங்கிளியே. (பைங்)

2, கன்னியறம் பூண்ட பெண்ணடியோ—சுவைக்
காதலைக் காணாத கண்ணடியோ
கற்புக் கனல்கொண்டு பைங்கிளியே—கெட்ட
காமம் எரிப்பதில் வென்றிடுவோம். (பைங்)

3 புலன்களை வென்றவர் புவியாள்வார்—என்ற
பொதுநல நீதியைக் கைப்பிடித்தோம்
நலன்களைச் சுவைகளைத் துறந்தோமடி—பகை
நலித்தறம் காத்திடப் பைங்கிளியே. (பைங்)

## காட்சி 24.

(பொன்னன் குழுவும், குள்ளன் குழுவும்
சடுகுடுப்பான் ஆடுகையில்)

பொ:— காவேரிக் கரையிலே புரளுது நீரு
கரும்பொடு விளையுது இச்சிடிகாரு
கோவேறு கழுதையை கொண்டுவந்தாரு
கொஞ்சுது மிஞ்சுது ஒதைக்குது பாரு
பலீன் சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு
கத்திக் கவடு கவான கவடு சடுகுடு
சடுகுடு சடுகுடு

கு:— ஆனைமலைப் பள்ளத்தே நடக்குது வேட்டை
ஆணென்று பெண்ணென்று பாடுது பாட்டை
அறுபதடி வேங்கை கலக்குது காட்டை

அடிக்குது பிடிக்குது துடிக்குது சாட்டை
யலின் சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு
வெட்டுக்கவடு, வீரக்கவடு சடுகுடு சடுகுடு
—சடுகுடு.

## காட்சி 29.

(தாமரை நாச்சியின் மரணம். பம்பைப் பாட்டு)

1. அம்மா அம்மா என்றுமே அலறியல்லோ துடித்தார்கள்
ஆறாத துயரக் கண்ணீர் அண்ணன்மாரே வடித்தார்கள்
தன் மானத் தாயல்லவோ தாமரை நாச்சியம்மா
தன் மகளைக் காக்க வந்து பெண்ணரசி மடிந்தாளே!

2. வாழ்விழந்தாள் தாமரையாள் வசமிழந்தார் குன்றுடையார்
தாழ்வது நேர்ந்த தென்று தலைகுனிந்தார் வீரமைந்தர்
ஆண்மையுள நல்லதங்கை அருக்காணி பைங்கிளியாள்
ஆருயிர் தந்தை மனம் தேறுவரோ துயரமதில்?

3. நெஞ்சிலே நெருப்பெரிய நெடுவிழிகள் நீர்சொரிய
நேர்மையுள்ள பொன்னனுடன் தேம்பிநின்றார்
சங்கரனும்
வெஞ்சமரன் வீரவாகு ஓடிவந்தே சேதி சொன்னான்
வேதனை மறந்து பொன்னன் வீறுகொண்டு எழுந்தாரே!

## காட்சி 32.

(குப்பாயி மடிந்தபோது)

தொகையறு.

ஒருரோமம் போனாலும்
கவரிமான் உயிர்வாழாது

உயர்வான லட்சியமே
பழுதானால் பயன்படாது.

பாடல்.

மானம் பெரிதென்றவள்—மனித
வாழ்வு சிறிதென்றவள்
ஊனம் நிகழவில்லை—எனினும்
உயிரையே துறந்தாள்.

## காட்சி 41.

(அருக்காணி, அண்ணன் பொன்னனை போர்முனைக்கு அனுப்புகையில்)

1. அண்ணமார் இருபேரும் அருஞ்சமர்க் களத்திலே
ஆற்றலுடைப் பெருவாழ்வின் அறமதனைச் சொல்லுக.
எண்ணமெலாம் செயலாக்கி ஏற்றபுகழ் எய்துக.
என்னண்ணன் சின்னண்ணன் பெரியண்ணன் வெல்லுக!

2. குன்றுடைய கோமானின் குலமதனில் பிறந்தோம்
குற்றமதைப் போக்குவதில வெற்றிபெற வேண்டும்
மன்றுடைய மதியுடைய மாண்புடைய வீரர்களே
மனிதரிலே தெய்வமென ஞாலமே போற்றுமண்ணா.

## காட்சி 44.

### பம்பைப் பாட்டு.

1. இறந்தும் இறவாதவராய்ச்சிறந்தாரே அண்ணன்மார்கள்
மறைந்தும் மறையாச் சிலைகள் மாண்புடைய வீரதெய்வம்

பிறந்தவரெல்லாம்பெருமை பெறுவதுண்டோ
இதுபோலே?
பெற்றவர் வாழ்க! தமிழ் பெருவீரம் மிக வாழ்க!

2. குன்றுடையான் கதைகேட்டோர் கேட்க வகை
செய்தவர்கள்
குணமுள்ள செந்தமிழ்போல் குறைதீர்க, நனிவாழ்க!
என்றுமிந்த வீரர்புகழ் எழிற்கலையாய் வாழியவே!
ஏற்றமிகும் நல்லறங்கள் போற்றியிந்தப் புவி வாழ்க!

(பம்பைப் பாட்டுக்காரர்கள் கதையைப் பாடி முடிக்கின்றனர். அண்ணன்மார் சிலைகளை அனைவரும் வணங்குகின்றனர்)

கருத்துரைகள்:

# இதழ்கள் இயம்பின.

என். என். கண்ணப்பாவின் நவசக்தி நாடக சபாவின் சலகை. ப. கண்ணன் எழுதிய வரலாற்று நாடகமான "குன்றுடையான்" ஜனவரி 29-ஆம்தேதி மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் அரங்கேறியது.

மேலை நாட்டு வரலாற்று நாடகங்களைப்போல் வீர உணர்வினைத் தரும் முயற்சியில் வெற்றிபெற்ற இந்நாடகத்தைத் தயாரித்த என். என். கண்ணப்பாவும், கதை, வசனமெழுதிய சலகை. ப. கண்ணனும் ஏகோபித்த பாராட்டைப் பெறுகின்றனர்.

சமூக நாடகங்களைப் பார்த்துச் சலித்த கண்களுக்கு "குன்றுடையான்" ஒரு புதிய விருந்து.

ரசிகர்களுக்கு, வரலாறு நடந்த காலத்திற்கேசென்றுவிட்ட மாதிரி ஒரு பிரமையினை ஏற்படுத்திய அரங்க அமைப்பும், ஒப்பனையும், நடிப்பும் பாராட்டுக்குரியன,

பொன்னனாக நடித்த என். என். கண்ணப்பா சிறந்த முறையில் நடித்தார், மற்றும் தங்கராஜு, பாரதி-கதிரேசன், சக்திவேல், சீனிவாசன், சிங்காரம், எஸ். என். பார்வதி ஆகியோர் நடிப்பில் சிறப்புத் தெரிகிறது.

அருக்காணியாக நடித்த கே. ஆர். விஜயகமலம் முன்னேறும் நடிகை.

முடிவில்: "குன்றுடையான்" குன்றின்மேல் ஒளியாகத் திகழ்கிறது.

—'நவசக்தி'
7-2-68.

பழம்பெரும் எழுத்தாளரும், பண்பட்ட கவிஞருமான சலகை ப. கண்ணன் அவர்கள் எழுதிய "குன்றுடையான்" நாடகம் சென்னை ரசிக ரஞ்சனி சபாவில் அண்மையில் அரங்கேற்றப் பட்டது.

நடிகர் என். என். கண்ணப்பா குழுவினர் இந்த நாட கத்தை நடித்தனர். கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் கொங்கு நாட்டைச் சேர்ந்த வாங்கல் நகரில் மணியமாக வாழ்ந்த குன் றுடையான் வாழ்க்கை வரலாற்றினைக் கருவாகக் கொண்டு பின்னப்பட்டிருந்தது நாடகம்.

வசனங்களிலும், பாடல்களிலும் தமிழ் கொஞ்சும்படி எழுதி யிருந்தார் கதாசிரியரான கண்ணனுர்.

என். என். கண்ணப்பா, கதிரேசன் முதலான நடிகர்களும் பார்வதி, விஜயகமலம் முதலான நடிகைகளும் மிகையின்றி நடித்து நாடகத்தைச் சிறப்பித்தனர். தஞ்சை பாலுவின் இசை யமைப்பு சிறப்பாயிருந்தது.

மொத்தத்தில் "குன்றுடையான்" ஒரு நல்ல நாடகம்.

—'சமநீதி'
11—2—68.

★ ★ ★

*இது ஒரு வரலாற்று நாடகம். இதன் கதை, வசனம், பாடல்களை சலகை ப. கண்ணனுர் எழுதியிருக்கிறுர்.*

*சிறப்பான கதையம்சமும், கருத்தாழமிக்க வசனங்களும் மிகுந்து விளங்குகின்றது.*

*பொன்னனுக நடித்த என். என். கண்ணப் பாவின் நடிப்பு சிறப்பாக இருந்தது.*

*—"திரை உலகம்"*
*1—3—68.*



கூடிய குடும்பத்தோடு குன்றுடையான்.



நாடகச்சுவையிலே திளைப்பவர்கள்.

வானொலி

## நாடகத்தில் நடித்தவர்கள்.

| | | |
|---|---|---|
| குன்றுடையான் | — | ப. கண்ணன் |
| பொன்னன் | — | எஸ். எஸ். கதிரேசன் |
| சங்கரன் | — | கே. என். சிவக்காளை |
| காளியப்பன் | — | கே. கே. பெருமாள் |
| செல்லாத்தாள் | — | டி. செல்லக்குட்டி |
| தாமரைநாச்சி | — | வி. எம். பங்கஜவல்லி |
| அருக்காணி | — | டி. எஸ். பகவதி |
| குப்பாயி | — | சரோஜினிபாய் |

மற்றும் சிலர்.

## சுவைத்தவர் செப்பியவை.

"நாடக அமைப்பு மிக நன்று. உரையாடல்களில் உயிரோட்டம் பளிச்சிட்டது. நம் கொங்கு நாட்டு வரலாற்றை ஒட்டிய இத்தகைய நாடகங்கள் பலவற்றைத் தங்கள் வன்மைமிக்க எழுத்தாற்றல் உருவாக்கித் தரவேண்டும் என்பது என் விருப்பம் மட்டுமன்று; வேண்டுகோளுமாகும்.

குன்றுடையானாக நடித்த தங்கள் நடிப்பு உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியை உலுக்கியது. அருக்காணி, பொன்னன், சங்கரன் முதலியோர் நடிப்பும் மிகச் சிறப்பாக இருந்தது."

—புலவர். ந. செகதீசன்,
தலைமைத் தமிழாசிரியர்,
மதரசா இசுலாமியா உயர்நிலைப்பள்ளி,
ஈரோடு.

தங்கள் 'குன்றுடையான்" நாடகம் கேட்டுப் பெருமகிழ்வெய்தினேன். மேலைநாட்டிலக்கியம் பயின்றதன் விளைவோ

என்னவோ தங்கள் நாடகம் கேட்கையில், மேலைப் பேரிலக்கிய மாம் ஹோமரின் "இலியட்" எண்ணம் வந்தது. உலகப் பேரிலக்கியம் என மேலை நாட்டார் போற்றும் "ஹெலன்"கதையின் வீர அம்சங்கள் பல தங்கள் நாடகத்திலே கண்டேன். கொங்குவேளிர்குல வீரக்கதைக்கும், யவனப் பெருங்கதைக்கும் உள்ள ஒற்றுமையில் மனிதகுலத்தின் வீரச் சிறப்புகளின் தொன்மை ஒருமைப்பாடுகள் வெளிப்படுகின்றன, சிறப்பாக "அருக்காணி"யின் பாத்திர அமைப்பு "இலியட்"டில் வரும் கஸ்ஸாண்ட்ராவை அழுத்தமாக நினைவூட்டியது.

கம்பீர்யம் நிறைந்த தங்கள்குரல் நாடகத்திற்கு அச்சாணியாக இருந்தது. கே. கே. பெருமாள் அவர்களின் நடிப்பு பாராட்டுதலுக்குரியது. குள்ளனாக நடித்தவரை பொன்னன் அல்லது சங்கரனாக நடிக்கச் செய்திருக்கலாம்.

பெருமைக்குரிய தமிழிலக்கியத் தரம்வாய்ந்த நாடகம் ஒன்றைத் தந்த தங்களுக்கு நானும், தமிழகமும் கடமைப் பட்டுள்ளோம்.

—பேராசிரியர், M. S. நாடார், M. A,
அதிபர்; குமரி டுட்டோரியல் கல்லூரி & உயர்பள்ளி,
திருச்சி-2.

தங்கள் நாடகம் 'குன்றுடையான்' ரேடியோவில் 20-2-66-ல் கேட்டேன். மிக நன்றாக அமைந்திருந்தது. நல்ல பைந்தமிழ் அமைப்பு. இன்னும் இவ்வாறு சரித்திர சம்பந்தமானபல தமிழ் நாடகங்கள் எழுதி தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்யுமாறு விழைகின்றேன்.

—செ. இரா. சுப்ரமணியம்,
தலைவர், முத்தமிழ் மன்றம், திருப்பூர்.

"பொள்ளாச்சியில் நடைபெற்ற கலை இலக்கிய மாநாட்டுக்குச் சென்றபொழுது, அங்கேயே நாடகம் கேட்க நேர்ந்தது.

என்னுடன் இலக்கிய ஆர்வம் கொண்ட ஒரு பட்டாளமே கேட்டது!

வசனம் சிறப்பாக அமைந்துள்ளது. கொங்கு நாட்டின் பைந்தமிழைக் கேட்டேன் அவற்றில் என்னைக் கவர்ந்த சில இடங்கள்:-

"மானம் குலம் ஆகியவற்றைக் காப்பது வீரம், அதுவே மனித குலத்தின் சாரம்"; "அடங்காத குதிரையை அடக்க வந்திருக்கும் மடங்காத வீரர்கள்"; "ஊரைக் கொளுத்தும் ராசாவுக்குப் பந்தம் பிடிக்கும் மந்திரி"; "பழிபாவம் செய்வோர்க்குப் பாயும் சிங்கம்" பாத்திரத்தின் தன்மைக்கேற்ற வசனம், பொருந்தாத கடமுடா வசனங்கள் இல்லை. எல்லோரையும் கவர்ந்த ஒரு இடம்:- "ஊருக்குத் தலைவன் நான், எனக்குத் தலைவன் மது!" என்று செல்லாத்தாளைப் பேச வைத்த பிறகு, காளியப்பன் பேசுகிறான்: "பாரப்பா ஊராட்சித் தலைவனின் லட்சணத்தை!" இதைக்கேட்டு என்னுடன் இருந்த அத்தனை பேரும் கை தட்டினர்! பிரம்மாதம்!

குன்றுடையான் அயராத உழைப்பாளி, அவன் சிறப்பே உழைப்புதான். கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளம்.

தேன் கூட்டின் ராணி ஈ தாமரைநாச்சி, குடும்பத்துக்கு வரும் ஆபத்துக்களை விழிப்புடன் கவனிப்பவள். அவற்றுக்கு எதிராகக் குமுறி எழுபவள்! கொடி உயர்த்துபவள்! ஆனால் கணவனுக்கு அடங்கி "மன்னவனை முன் நடத்திப் பின் தொடரும் மடக்கொடி."யல்லவோ அவள்? இதைத் திருப்திகரமாகச் செய்துள்ளீர்கள்.

வசனத்தில் கொங்குநாட்டுத் தமிழ் மணந்தது. தொன்மையான பழமொழிகள் தேவையான அளவுக்கு இடம் பெற்றன.

வீரமலைக் காட்டில் தந்தையின் கட்டளைப்படி, கன்னியோகியான பெரிய காண்டியின் வழிகாட்டலுக்கு உட்பட்டு,

கற்பின் கனலியான அருக்காணிநிலைபெற்ற சிலையாக நிற்கிருள். துன்பத்தை ஆற்ற நல்ல முடிவு.

—கே. வி. இராமசாமி,
தலைவர்,
சேலம் மாவட்ட கலை இலக்கியப்பெருமன்றம்,
நல்லிபாளையம்.

தங்களுடைய வரலாற்றுப் படைப்பான "குன்றுடையான்" நாடகத்தினை இருமுறை வானொலியின் மூலம் கேட்கும் நல்ல தோர் வாய்ப்பினைப் பெற்றேன். எல்லையில்லா மகிழ்ச்சியினையும் பெற்றேன். தங்களது எழுத்தோவியங்களில் விளையாடும் கொஞ்சு தமிழ் இந்நாடகத்திலும் கொஞ்சி விளையாடுதலைக் கேட்டுண்டு களித்தேன்.

—புலவர், மணவை. க. தங்கவேலன்,
தமிழாசிரியர்,
தியாகேசர் ஆலை உயர்நிலைப் பள்ளி,
மணப்பாறை, திருச்சி மாவட்டம்.

# கொங்கு நாட்டுப் பெருமக்களுக்கு!

கொங்கு நாட்டில் நெடுங்காலமாக பம்பைப் பாட்டா கவும், தெருக் கூத்தாகவும் நடைபெற்றுவரும் "குன்றுடையான் கூத்து" "அண்ணன்மார் கதை" "பொன்னர் சங்கரர் கதை" என்ற பெயருள்ள வீரமாக் கதையினை கிராமியப் பெருமக்கள் நன்கு அறிவார்கள்.

அந்தக் கதையினை வரலாற்று பூர்வமாக ஆராய்ந்து "குன்றுடையான்" என்ற பெயரால்வரலாற்று நாடகமாக, நாடகப் பேராசிரியர் சலகை. ப. கண்ணனார் அவர்கள் எழுதியுள்ளார்.

அந்தப் பைந்தமிழ் வீரகாவியத்தை நாங்கள் நவசக்தி நாடக சபாவின் மூலம் சிறந்த மேடை நாடகமாகத் தயா ரித்து, சென்னை ரசிக ரஞ்சனி சபாக் கலையரங்கில், தமிழ கப் பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர், மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் 29-1-68 திங்கட் கிழமை மாலை அரங்கேற்றினோம். அறிஞர்கள், சுவைஞர் களின் பாராட்டினைப் பெற்றோம்.

சிறப்பாகத் தமிழகத்திற்கும், குறிப்பாகக் கொங்கு நாட்டிற்கும் பெருமைதரும் இந்நாடகத்தைக் கொங்கு நாட்டின் மாநகரம், நகரம், பேரூர், சிற்றூர்கள் தோறும் நடத்த விரும்பும் எங்களுக்கு உங்களது நல்லாதரவு கிடைக்குமென்று நம்புகிறோம்

அன்புக்குரிய,

நடிகர். என். என். கண்ணப்பா.

என். என். கண்ணப்பாவின்

## நவசக்தி நாடக சபா

நடத்திவரும் சிறந்த நாடகங்கள்.

| | |
|---|---|
| 1. பரோபகாரி சமூகம் | கவிஞர் S. D. சுந்தரம் M.L.C. |
| 2. குலப்பெண் சமூகம் | இரா. பழனிசாமி |
| 3. கவிச்சக்ரவர்த்தி கம்பர். சரித்திரம் | ,, |
| 4. யுக சங்கமம் சமூகம் | D. செல்வராஜ் B. A. B. L. |
| 5. குன்றுடையான் வரலாறு | சலகை, ப. கண்ணனூர் |

நாடகம் விழைவோர் தொடர்பு கொள்க:

**என். என். கண்ணப்பா,**

தலைவர்,

நவசக்தி நாடக சபா,

83, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை,

சென்னை 14.

## ஆசிரியர், சலகை. ம. கண்ணனாரின் பிற நூல்கள்.

### 1. சிறு கதைகள்.

| | | |
|---|---|---|
| காதல் மணம் | ரூ | 0–50 |
| சிந்தனைச் சித்திரம் (அச்சில்) | ரூ | 1–00 |

### 2. இசைப்பாடல்கள்.

| | | |
|---|---|---|
| குறள்நெறி இசையமுது. | முதல் பகுதி | 0–7 |
| ௸ | இரண்டாம் பகுதி | 0–7 |

### 3. நாடகங்கள்.

| | | |
|---|---|---|
| பகைமை வென்றான் | ரூ. | 3–0 |
| தமிழ்வாழத் தலைகொடுத்தான் | ரூ. | 2–5 |
| பாண்டிய மகுடம் | ரூ. | 3–0 |
| மான மறவன் | ரூ. | 3–0 |
| வீரவாலி | ரூ. | 2–2 |
| கன்னியின் சபதம் | ரூ. | 0–5 |
| மின்னொளி | ரூ. | 0–3 |
| புரட்சிப் பாடகன் (அச்சில்) | ரூ. | 2–5 |
| நந்திவர்மன் (அச்சில்) | ரூ. | 2–5 |

**தென்றல் நூற்பதிப்புக் கழகம்**

சலகண்டபுரம். :–: சேலம் மாவட்டம்

செந்தமிழ் அச்சகம், சலகண்டபுரம்.